RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

DAILY EVENING
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 153 | ஜூன்.10 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் மின்வெட்டு குறித்து கண்காணித்து நடவடிக்கை எடுக்கிறோம்: அமைச்சர் நிர்மல்குமார்

சென்னை: ஜூன்.10-

“ஒருசில நபர்களின் சதி வேலையால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் மின்வெட்டு தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். எங்கெல்லாம் மின்வெட்டு உள்ளது, அதனை எவ்வளவு நேரத்தில் சரிசெய்கிறோம் என்பதை மின் துறையின் சமூக வலைதளப் பக்கத்தில் உடனுக்குடன் தெரிவித்து வருகிறோம். மக்களும் ஒத்துழைக்க வேண்டும்” என மின் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்தார்.

அகில இந்திய அளவிலான சிஐஐ கூட்டமைப்பு சார்பில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மின் துறை அமைச்சர் நிர்மல்குமார், “சூரிய ஆற்றல் மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து இந்த நிகழ்ச்சியில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.




இந்தத் துறையில் அரசு எடுக்கப்போகும் கொள்கை முடிவுகள் மற்றும் அரசின் ஒத்துழைப்பு குறித்து விளக்கமளித்தோம்.

எங்கெல்லாம் மின்வெட்டு உள்ளது, அதனை எவ்வளவு நேரத்தில் சரிசெய்கிறோம் என்பதை மின் துறையின் சமூக வலைதளப் பக்கத்தில் உடனுக்குடன் தெரிவித்து வருகிறோம். தவறான நபர்கள் வேண்டுமென்றே ஃப்யூஸ்களை பிடுங்கி, மின்வெட்டு ஏற்படுத்தியது குறித்த புகார்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிசிடிவி இருந்ததால் ஒரு சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிசிடிவி இல்லாத இடத்தில் பொது மக்கள் கண்காணிக்க வேண்டும்.

பெரம்பூரில் இரு தெருக்களில் வேண்டுமென்றே மின்வெட்டு ஏற்படுத்தப்பட்டது. உடனே அது சரிசெய்யப்பட்டது. அப்போது சிலர் தூண்டுதலின் பேரில் மக்களை சாலைகளில் நிறுத்தி பிரச்சினை செய்தார்கள். ஒரு சில இடங்களில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் மின் வெட்டையும் சரி செய்கிறோம். இந்த விஷயத்தில் பொதுமக்களும் எங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சமூக வலைதளங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் வழியாக அளிக்கப்படும் புகார்கள் மின்னகத்தின் மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது” எனத் தெரிவித்தார்.




■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களை 8.6.2026 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பின் (CITU) அகில இந்தியத் துணைத் தலைவர் திரு.ஏ. சௌந்தரராஜன், தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு. ஜி. சுகுமாரன், பொதுச் செயலாளர் திரு. எஸ். கண்ணன், பொருளாளர் திரு. எஸ். ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள். உடன் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா அவர்கள் உள்ளார்.

# “ஆட்சிக் கலைப்பு கவிழ்ப்பு எண்ணம் இல்லை; ஸ்டாலின் பேச்சை திரித்து பரப்புகின்றனர்” : தங்கம் தென்னரசு

சென்னை: ஜூன்.10-

“ஆறு மாதம் அல்ல, மூன்று மாதம் கூட தாங்காது என்ற நிலைமையில் தான் தவெக ஆட்சி போய்க்கொண்டு இருக்கிறது” என்று தான் ஸ்டாலின் கூறினார். ஆனால் மூன்று மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அவர் சொன்னதாகத் திரித்து செய்தி பரப்பப்படுகிறது” என்று முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “தமிழ்நாட்டில் புதிதாக ஒரு ஆட்சி அமைந்து ஒரு மாதம் ஆகிறது. இந்த ஒரு மாதமும் டிவியைப் பார்த்தாலும் நாளிதழ்களைத் திருப்பினாலும் கொலையும், கொள்ளையும், பாலியல் வன்கொடுமைகளும், போதை மருந்து நடமாட்டமும் தான் செய்திகளாக இருக்கின்றன. பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஆளும் கட்சியான தவெக நிர்வாகிகளே சம்பந்தப்பட்டு உள்ளனர்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், சொந்தக் கட்சிக்காரர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அந்தப் பெண்ணால் குற்றம் சாட்டப்படும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ மீது இதுவரை நடவடிக்கை இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணை கட்சியை விட்டு நீக்கி இருக்கிறது தூய சக்தி என்று கபட வேடம் போடும் அரசு.

“இந்த ஆட்சியை ஆறு மாதம் விமர்சிக்க மாட்டோம்” என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்லியிருந்தாலும், நிலைமை மிக மோசமாகப் போய் வரும் நிலையில் அவர் விமர்சனம் செய்தார். “ஆறு மாதம் அல்ல, மூன்று மாதம் கூட தாங்காது என்ற நிலைமையில் தான் ஆட்சி போய்க்கொண்டு இருக்கிறது” என்று ஸ்டாலின் பேசினார். ஆனால், மூன்று மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அவர் சொன்னதாகத் திரித்து செய்தி பரப்பப்படுகிறது.

இது குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் செய்தியாளர்கள் கேட்டபோது, திமுக தலைவர் அப்படி பேசியிருக்கக் கூடாது என்று பேசி உள்ளனர். ஆட்சி கவிழும் என்று ஸ்டாலின் பேசவுமில்லை; அது அவரது நிலைப்பாடும் அல்ல! “ஆறு மாதம் வரை, இந்த ஆட்சி பற்றி விமர்சித்துப் பேசப் போவதில்லை” என்று ஸ்டாலின் சொல்லியிருந்தார்.

ஆனால் நாள்தோறும் கொலை, கொள்ளை, அரிவாள் வெட்டுகள், போதை மருந்துகள் நடமாட்டம், பெட்ரோல் குண்டு வீச்சுகள், மின் வெட்டு, விவசாயிகள் போராட்டம், பாலியல் வன்கொடுமைகள் நடப்பதைப் பார்க்கும் போது, இதை விமர்சிக்காமல் எப்படி இருக்க முடியும் என்ற பொருளில், “மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடு தான் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது” என்று பொருள்படும்படி தான் ஸ்டாலின் கருத்து தெரிவித்திருந்தார்.

ஆசை அறுபது நாள் என்பார்கள். ஆனால் இன்றைய ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள் ஒரு வாரம் தான் அமைதியாக இருந்தார்கள். சமூக வலைத் தளங்கள் முழுக்கவே ஆளும் கட்சிக்கு எதிரான ஆவேசமான கருத்துகளைத் தான் மக்கள் சொல்லி வருகிறார்கள்.

இதைத் தான் ஸ்டாலின் தனது உரையில் சுட்டிக் காட்டினார்கள். கலைப்பு, கவிழ்ப்பு எண்ணத்தோடு அல்ல. மக்களே களைத்துப் போய்விட்டார்கள் அதற்குள்!” என்று தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

# முதல்வர் விஜய் பத்திரிகையாளர்களை சந்திக்காதது ஏன்? செங்கோட்டையன் விளக்கம்

சென்னை: ஜூன்.10-

“முதல்வர் விஜய் செயல்பாடுகளையே முக்கியமாக நினைக்கிறார். சொன்னதைச் செய்கிறோமா, மக்கள் அதில் மகிழ்ச்சி அடைகிறார்களா என்பதையே முதல்வர் பார்க்கிறார். பத்திரிகையாளர்களை சந்தித்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதைக் காட்டிலும், செயல்வடிவத்திலே அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.” என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.



சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் செங்கோட்டையன், “வருவாய் துறையில் மக்களுக்கான சேவைகளை விரைவாக வழங்குவது குறித்து அதிகாரிகளுடன் ஆய்வுப் பணிகளை இன்று நடத்துகிறோம். குறிப்பாக சாதிச் சான்றிதழ் விரைந்து கிடைக்க என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக முடிவுகளை மேற்கொள்ள இருக்கிறோம். ரேஷன் கார்டுகள், முதியோர் உதவித் தொகை, சமூக நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை எப்படி எளிதாக கிடைக்கும் வகையில் நிறைவேற்றுவது என ஆய்வு செய்ய உள்ளோம்.

ஆன்லைன் முறையில் பதிவு செய்யும்போது, சில நேரங்களில் கால தாமதம் ஏற்படுவதாகக் குறைகள் உள்ளது. ஆன்லைன் மூலமாக பதிவு செய்தவுடன், அந்தந்த வருவாய் வட்டத்தில் விஏஓக்கள் ஆய்வு செய்து அந்தப் பணிகளை 5 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்கவில்லையென்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு நிலங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளது, அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் ஆய்வு செய்யவுள்ளோம். பட்டா மாறுதலில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க உள்ளோம். தமிழகத்தின் பேரிடர் மேலாண்மை பணிக்கு ரூ.1000 கோடி தேவை என சொன்னோம், அதனை முன்னெச்சரிக்கையாகவே மத்திய அரசு வழங்கியிருக்கிறது.

முதல்வர் செயல்பாடுகளையே முக்கியமாக நினைக்கிறார். சொன்னதைச் செய்கிறோமா, மக்கள் அதில் மகிழ்ச்சி அடைகிறார்களா என்பதையே முதல்வர் பார்க்கிறார். பத்திரிகையாளர்களை சந்தித்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதை காட்டிலும், செயல்வடிவத்திலே அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாரிதாஸ் எந்த அடிப்படையில் கைது செய்யப்பட்டார் என சட்ட ரீதியாக தெரியவில்லை. பத்திரிகை சுதந்திரம் என்பது தனிப்பட்ட விமர்சனமாக இல்லாமல் மக்கள் வளர்ச்சிப் பணிகளில் இருக்க வேண்டும். அப்போதுதான் நாடே வளர்ச்சியடையும்.” என்று தெரிவித்துள்ளார்.

# த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 21 பேர் மீது தகுதிநீக்க நடவடிக்கை இல்லை

சென்னை, ஜூன்.10-

தமிழக சட்டசபையில் கடந்த மாதம் 13ந் தேதி நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசு வெற்றி பெற்றது. ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன. 5 பேர் நடுநிலை வகித்தனர். தி.மு.க. வெளிநடப்பு செய்தது.

இதில், அ.தி.மு.க.வை சேர்ந்த 25 உறுப்பினர்களும் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்திருந்தனர். இவர்களை தகுதிநீக்கம் செய்யக்கோரி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகருக்கு கடிதம் எழுதியிருந்தார்.



அந்த கடிதம் மீதான நடவடிக்கை குறித்து சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், தலைமைச்செயலகத்தில் நிருபர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் 25 பேரை தகுதிநீக்கம் செய்யக்கோரி எடப்பாடி பழனிசாமி சார்பில் மனு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக, அவரிடம் இருந்து 4 கடிதங்கள் வரப்பெற்றன. அதன்பின்னர், 21 உறுப்பினர்கள் அளித்த விளக்கத்தை ஏற்று, அவர்களை மன்னித்து விடுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார். அவர் வழங்கிய 4 கடிதங்களை முறையாக ஆய்வு செய்தேன்.

எடப்பாடி பழனிசாமி 1352026 அன்று அனுப்பிய கடிதத்தில் தெரிவித்தபடி, உறுப்பினர்களின் மன்னிப்பு கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். அனைத்து மேல் நடவடிக்கைகளையும் கைவிடுகிறேன். எஞ்சிய 4 பேர் மீது நடவடிக்கை எடுக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரியிருந்தார். அதன்படி, உறுப்பினர்கள் எஸ்.ஜெயக்குமார், மரகதம் குமரவேல், சத்தியபாமா, இசக்கி சுப்பையா மீது நடவடிக்கை தொடங்கிவிட்டது. என்ன நடவடிக்கை என்பது பிறகு அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சொத்து முடக்க நடவடிக்கைக்கு எதிராக லாட்டரி மார்ட்டின் தொடர்ந்த வழக்கு: அமலாக்கத் துறை பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூன்.10-

லாட்டரி அதிபர் மார்ட்டினுக்கு சொந்தமான 457 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் முடக்கத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், அமலாக்கத் துறை பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2009 2010ம் ஆண்டுகளில், விதிகளை மீறி சிக்கிம் மாநில லாட்டரி விற்றதன் மூலம் 910 கோடி ரூபாய் அளவுக்கு சிக்கிம் மாநில அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாக, லாட்டரி அதிபர் மார்ட்டின் உள்ளிட்டோருக்கு எதிராக சிபிஐ வழக்குப்பதிவு செய்தது.



கேரளா நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கத் துறையும் வழக்குப் பதிவு செய்து, லாட்டரி அதிபர் மார்ட்டின் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடைய இடங்களில் சோதனை நடத்தியது. சோதனையின் முடிவில், லாட்டரி அதிபர் மார்ட்டினுக்கு தொடர்புடைய 457 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கம் செய்தது. அந்த முடக்கத்தை அமலாக்கத் துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உறுதி செய்தது.

இதை எதிர்த்து, மார்ட்டின் மற்றும் அவரது நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த மனுக்களில், சொத்துக்களை முடக்கம் செய்த உத்தரவை ரத்து செய்து, சொத்துக்களை விடுவிக்க உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வு, மனுவுக்கு ஆறு வாரங்களில் பதிலளிக்கும்படி, அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தது.



## ஆற்காட்டில் பாஜகவில் இருந்து we the leader இயக்கத்தில் இணையும் நிகழ்ச்சி!

ராணிப்பேட்டை, ஜூன்.10-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தனியார் திருமண மண்டபத்தில் பாரதிய ஜனதா கட்சியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் we the leader (இது நம்ம இயக்கம்) இயக்கத்தில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் பாஜக மாநில துணைத்தலைவர் வரதன், பாஜக ஊடகப்பிரிவு மாநிலச் செயலாளர் வேதா சீனிவாசன், பாஜக ஆற்காடு நகர முன்னாள் தலைவர் பாஸ்கரன், பாஜக ஆற்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜய் லோகேஷ் ஆகியோர் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைத் தலைவர் தனலட்சுமி அனைவரையும் வரவேற்றார் இதில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பாரதிய ஜனதா கட்சியினர் பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை துவங்கிய we the leader இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அண்ணாமலை அவர்களுக்கு தங்கள் ஒத்துழைப்பை தருவோம் என அனைவரும் உறுதியற்றனர். இறுதியில் பொதுச் செயலாளர்கள் சரவணன், எஸ்.ஆர். பாஸ்கரன் ஆகியோர் அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஜூன்.10-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் மாவட்ட குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 133 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக





நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில், போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய, அம்பலமூலா அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 13 மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும், பொம்மலாட்ட மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிர்மலா என்பவருக்கும் சான்றிதழ் வழங்கி பாராட்டின ார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், உதவி ஆணையர் (கலால்) மாதேஷ்வரன், மாவட்ட சமூக நல அலுவலர் பிரிவினா தேவி உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்




## சமையல் எரிவாயு விலையைஉடனடியாக குறைக்க வலியுறுத்திஅனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன் 10-

கிருஷ்ணகிரியில், அனைந்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில், சமையல் எரிவாயு விலையை உடனடியாக குறைக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள அண்ணாசிலை எதிரில், சமையல் எரிவாயு விலையை உடனடியாக குறைக்க வலியுறுத்தி, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் கவிதா தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ராதா கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில், சமையல் எரிவாயு விலையை ஒன்றிய அரசு உடனே குறைக்க வேண்டும். அனைத்து குடும்பங்களுக்கும் ஆண்டுக்கு 12 சிலிண்டர்கள் மானிய விலையில் வழங்க வேண்டும். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு நிரந்தரமாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், 01 பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டையை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (08.06.2026) அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர். உமாமகேஸ்வரி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



## வாடகை பாக்கி செலுத்தாத கடைகளுக்கு பேரூராட்சி சீல்

கிருஷ்ணகிரி, ஜூன்.10-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலைய வாடகை கட்டிடங்கள் மற்றும் சந்தைப்பேட்டையில் அமைந்துள்ள சில கடைகள், நீண்டகாலமாக வாடகைத் தொகையை செலுத்தாமல் இருந்ததாக கூறப்படுகிறது.இதையடுத்து, பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் உத்தரவின் பேரில், பேரூராட்சி செயல் அலுவலர் ராணி தலைமையில் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆய்வு மேற்கொண்டு, வாடகை பாக்கி செலுத்தாத கடைகளுக்கு சீல் வைத்து நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கை பேரூராட்சி வருவாய் வசூலை ஒழுங்குபடுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரி அருகே உள்ளகாலபைரவர் கோயிலில் தேய்பிறை அஷ்டமியையொட்டிசிறப்பு பூஜைகள்

கிருஷ்ணகிரி, ஜூன் 10-


கிருஷ்ணகிரி அருகே உள்ள காலபைரவர் கோயிலில் தேய்பிறை அஷ்டமியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. கிருஷ்ணகிரி அருகே கல்லுக்குறிக்கி பெரியஏரி மேற்கு கோடியில் உள்ள காலபைரவர் கோயிலில், நேற்று தேய்பிறை அஷ்டமியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. காலை 7 மணிக்கு கணபதி ஹோமம், அஸ்டதிக்பதி ஹோமம், நவகிரக ஹோமம், மஹாலட்சுமி ஹோமம், காலபைரவ மஹா ஹோமம், பூர்ணாஹூதி, காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகம், தீபாராதனை, தீர்த்தப்பிரசாதம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தது. தங்கக் கவச அலங்காரத்தில் காலபைரவர் அருள்



பாலித்தார். பகல் 12 மணிக்கு, கால பைரவர் உற்சவமும், பரணி தீபம் ஏற்றும் நிகழ்ச்சியும் நடந்தது.இதில், ஏராளமான பெண்கள் பூசணி மற்றும் தேங்காயில் விளக்கேற்றி நேர்த்திக் கடன் செலுத்தினர். இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி எம்எல்ஏ., முகுந்தன் உள்பட மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை, 165 கிராமங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள் செய்திருந்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டன.இதே போல், கிருஷ்ணகிரி அடுத்த கந்திகுப்பம் கால பைரவர் கோயில் மற்றும் சூரன்குட்டை தக்சண கால பைரவர் கோயிலில், தேய்பிறை அஷ்டமியையொட்டி சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ திருப்பத்தூர் மாவட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்கூஷ்ய் அனில் வாகரே, இ.கா.ப., உத்தரவின் பேரில் மாவட்ட SJHR (Social Justice and Human Rights) பிரிவினரால் சோமலாபுரம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி உத்தரவாதச் சட்டம் (MGNRS) ஊழியர்களுக்கு சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மனித உரிமைகளின் முக்கியத்துவம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள், சமூக சமத்துவம், சட்ட உதவிகள் மற்றும் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.மேலும், பொதுமக்கள் தங்களது உரிமைகள் குறித்து விழிப்புணர்வுடன் இருந்து, சமூக ஒற்றுமையையும் மனிதநேயத்தையும் பேணிட வேண்டும் என காவல்துறையினர் அறிவுறுத்தினர்



## சென்னை வியசார்பாடியில் மின்வெட்டு காரணமாக தனியார் பள்ளிக்கு விடுமுறை

சென்னை, ஜூன்.10-

வியாசர்பாடியில் மின்வெட்டு காரணமாக தனியார் பள்ளிக்கு விடுமுறை அறிவித்துள்ளது. எருக்கஞ்சேரி அருகே நள்ளிரவு மின்மாற்றி வெடித்து சிதறியதால் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. நள்ளிரவு முதல் மின்சாரம் தடைபட்டுள்ளதால் பொதுமக்கள், பள்ளி செல்லும் மாணவர்கள் கடும் அவதி அடைந்துள்ளனர்

## தாராபுரத்தில் கருணாநிதி 103வது பிறந்தநாள் விழா: 550 ரேக்ளா வண்டிகள், 1,500 காளைகள் பங்கேற்ற பிரம்மாண்ட ரேக்ளா பந்தயம்!

தாராபுரம், ஜூன்.10-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சின்னக்காம்பாளையம் பேரூராட்சி தி.மு.க. சார்பில், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சி. குமாரபாளையம் உழவன் ரேக்ளா குழுமம் நடத்திய 13வது ஆண்டு ரேக்ளா பந்தயம் நாயனார் சாலை ஸ்ரீ சந்திராபுரம் பகுதியில் கோலாகலமாக நடைபெற்றது.போட்டியை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மு.பெ. சாமிநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தி.மு.க. திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளரும், திருப்பூர் மாநகராட்சி 4 வது மண்டலத் தலைவருமான இல. பத்மநாபன் மற்றும் தாராபுரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.போட்டிக்கான ஏற்பாடுகளை சின்னக்காம்பாளையம்





பேரூராட்சி தி.மு.க. செயலாளர் பன்னீர்செல்வம், தாராபுரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு மற்றும் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் கவியரசு ஆகியோர் செய்திருந்தனர்.

ரேக்ளா இரட்டை மாட்டு வண்டி பந்தயத்தில் திருப்பூர், பொள்ளாச்சி, கோவை, மடத்துக்குளம், உடுமலை, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும், அண்டை மாநிலமான கேரளாவிலிருந்தும் வீரர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் என இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் மொத்தம் 550 ரேக்ளா வண்டிகளும், 1,500 காளைகளும் களமிறங்கி தங்களது திறமையை வெளிப்படுத்தின.200 மீட்டர் பிரிவில் கருவேலம்பாளையத்தைச் சேர்ந்த கவின்குமார், 16.06 வினாடிகளில் இலக்கை எட்டி முதல் இடத்தைப் பிடித்தார். அவருக்கு ரூ.50,000 ரொக்கப் பரிசு, நினைவுக் கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இரண்டாவது இடத்தை அர்த்தநாரிபாளையத்தைச் சேர்ந்த சிவஞானம், 16.32 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து வென்றார். அவருக்கு ரூ.30,000 ரொக்கப் பரிசும் நினைவுக் கோப்பையும் வழங்கப்பட்டது.300 மீட்டர் பிரிவில் கணியூரைச் சேர்ந்த கருப்பணசாமி, 25.35 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்ததன் மூலம் முதல் பரிசான ரூ.50,000 ரொக்கப் பரிசு மற்றும் நினைவுக் கோப்பையை வென்றார்.

அதேபோல், ஜல்லிப்பட்டியைச் சேர்ந்த மிதன், 25.45 வினாடிகளில் இலக்கை எட்டி இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அவருக்கு ரூ.30,000 ரொக்கப் பரிசு மற்றும் நினைவுக் கோப்பை வழங்கப்பட்டது.

போட்டியில் பங்கேற்ற அனைத்து ரேக்ளா வீரர்களுக்கும் நினைவுப் பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன.

போட்டியைக் காண பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்தனர். பாதுகாப்பு கருதி அமைக்கப்பட்டிருந்த கம்பி வேலிகளுக்குப் பின்னால் இருந்து, சீறிப்பாய்ந்து வந்த காளைகளை கைதட்டி ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தினர். காளைகளின் வேகமும், வீரர்களின் திறமையும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுகளில் ஒன்றான ரேக்ளா பந்தயம், கிராமிய கலாசாரத்தின் பெருமையை உலகறியச் செய்யும் நிகழ்வாக தொடர்ந்து விளங்கி வருவதாக போட்டியில் பங்கேற்ற வீரர்கள் பெருமையுடன் தெரிவித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா ஜாதவ், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# மு. கருணாநிதி பிறந்த நாள் விழா புத்தகரத்தில் 1000 பேருக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூன்.10-

மாதவரம் தெற்கு பகுதி 32வது வட்டத்திற்கு உட்பட்ட புத்தகரம் சூரப்பட்டு இந்திரா நகர் டேங்க் அருகே மறைந்த தமிழ்நாடு முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் ஆலோசனையின் பேரில் மீனவரணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.என். கோதண்டன் ஏற்பாட்டில் 1000 பேருக்கு அறுசுவை அன்னதானம் கறி சாப்பாடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் மண்டலக் குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால் கலந்து கொண்டு கட்சி கொடியேற்றி அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் சுமார் 1000 பேருக்கு அறுசுவை அன்னதானம் கறி விருந்தை துவக்கி வைத்தார். 32வது வார்டு மாமன்ற உறுப்பினர் புத்தகரம் இ.ஏழுமலை, 32வது வட்டச் செயலாளர் எம்.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட பிரதிநிதிகள் சிவில் எம்.செல்வம், டி.ரமணன், தேவி கௌதமன், பகுதி துணை செயலாளர் விஜயலட்சுமி ஆனந்த், 32வது வட்ட நிர்வாகிகள் கே.பத்மநாபன், கௌதம் பாலாஜி, ஆர்.தேவன், எஸ்.ஹேமாவதி, எம்.சேகர், பகுதி பிரதிநிதி டிவிஎஸ். சீனிவாசன் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# கள்ளச்சாராயம் மற்றும் கஞ்சா ஒழிப்பு: பழனி மலைப் பகுதிகளில் போலீஸ் வனத்துறை கூட்டு அதிரடி வேட்டை



திண்டுக்கல், ஜூன்.10-

திண்டுக்கல் மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு சார்பாக, சட்டவிரோத மது விற்பனை மற்றும் போதைப் பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதன் ஒரு பகுதியாக, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் வினோதினி தலைமையில், மதுவிலக்கு காவல் ஆய்வாளர் ஆறுமுக நயினார்,பழனி தாலுகா நிலைய காவல் ஆய்வாளர் சத்திய மூர்த்தி மற்றும் வனத்துறையினர் இணைந்து கூட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கினர். "பழனி தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மலைவாழ் கிராமங்களான புரியம்பட்டி, பொருத்தல், சண்முகம் பாறை மற்றும் கணவாய்மேடு ஆகிய பகுதிகளில் அதிரடியாக விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு தொடர்பான குற்றங்களை தடுப்பது குறித்தும், சட்டவிரோத செயல்கள் பற்றி பொதுமக்கள் அச்சமின்றி உடனடியாக காவல்துறைக்கு தகவல் தர வேண்டும் என்றும் அதிகாரிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டது."விழிப்புணர்வு கூட்டத்தை தொடர்ந்து, அதிகாரிகள் குழுவினர் அப்பகுதியில் உள்ள மலைப் பள்ளத்தாக்குகள், இயற்கை நீரோடைகள் மற்றும் கரும்பு பயிரிடப்பட்டுள்ள விவசாய நிலப் பகுதிகளில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அடர்ந்த இந்த மலைப்பகுதிகளில் கள்ளச்சாராய ஊரல்கள் ஏதேனும் போடப்பட்டுள்ளதா அல்லது கஞ்சா செடிகள் வளர்க்கப்படுகிறதா என்பதை கண்டறிய இந்த தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. பொதுமக்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில், இந்த மலைப்பகுதிகளில் தற்போதும் தேடுதல் வேட்டை தீவிரமாக தொடர்ந்து வருகிறது.



# தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு சிறப்பான வரவேற்பு

## MIS குரூப் இந்தியா நிறுவனத் தலைவர் டாக்டர் திருப்பதி ராவ் கிரீடம் அணிவித்தார்

திருப்பத்தூர், ஜூன்.10-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த ஜி.வீரப்பள்ளி பகுதியைச் சேர்ந்த MIS குரூப் இந்தியா நிறுவனத் தலைவர் டாக்டர் திருப்பதி ராவ் அவர்கள் T. வீரப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ரோஜா பூ கொடுத்து தலையில் கிரீடம் அணிவித்து கௌரவப்படுத்தி கல்வி உபகரணங்கள் வழங்கி தனது மனைவியின் ஆசையை நிறைவேற்றினார். அவரது மனைவி அர்ச்சனா அவர்கள் சிறுவயதில் T.வீரப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயின்று வந்தார் அதன் காரணமாக அர்ச்சனாவின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் படித்த தொடக்கப்பள்ளி மாணவ மாணவிகளை நேரில் அழைத்து ரோஜா பூ கொடுத்தும் தலையில் கிரீடம் அணிவித்து கௌரவப்படுத்தி ரூபாய் 5000 மதிப்பிலான ஸ்கூல் பேக் நோட்டு புத்தகம் வாட்டர் பாட்டில் ஸ்நாக்ஸ் பாக்ஸ் டிபன் பாக்ஸ் உள்ளிட்ட பல பொருட்களை பள்ளி மாணவ மாணவிகளுக்கு டாக்டர் திருப்பதி அவர்கள் வழங்கினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் அழகிரி சிறப்பு விருந்தினர்கள் திரிகாலம் பள்ளி தலைமை ஆசிரியர் சுமத்தி ஜோலார்பேட்டை சவுத் ஸ்கூல் தலைமையாசிரியர் சசிகலா ஹெல்த் கேர் பிரைவேட் லிமிடெட் தினகரன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சம்பத் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி சுந்தரேசன் மற்றும் ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளையும் நேரில் அழைத்து கௌரவப்படுத்தினார். T. வீரப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியை தத்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன் அதற்கு ஒப்புதல் கிடைத்தால் இன்னும் சுலபமாக என்னால் முடிந்த அனைத்து நல திட்டங்களையும் செய்து தருவேன் எனவும் உறுதியளித்தார்.

# உதகை தாவரவியல் பூங்காவினை உருவாக்கிய வில்லியம்கிரஹம் மெக்ஜவர் 150. நினைவுதினத்தினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்



உதகை, ஜூன்.10-

நீலகிரி மாவட்டம், உதகை அரசு தாவரவியல் பூங்காவை உருவாக்கிய வில்லியம் கிரஹம் மெக்ஜவர் அவர்களுடைய 150 வது நினைவு தினத்தினை முன்னிட்டு, புனித ஸ்டீபன் திருத்தலத்திலுள்ள அவருடைய நினைவிடத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம்தெரிவித்ததாவது:

178 வருட பழமையான உதகை அரசு தாவரவியல் பூங்காவை உருவாக்கிய வில்லியம் கிரஹம் மெக்ஜவர் அவர்களுடைய 150 வது நினைவு தினம் நீலகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பாக புனித ஸ்டீபன் திருத்தலத்திலுள்ள அவருடைய நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. மெக்ஜவர் அவர்கள் தனது 25ஆம் வயது முதல் 19 வருடங்களாக அயராது உழைத்து உதகமண்டலத்தில் அரசு தாவரவியல் பூங்கா அமைவதற்கு முக்கிய காரணமாக திகழ்ந்தவர். 1848 ம் ஆண்டு தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டது. மேலும், பல நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பல்வேறு வகையான அரிதான மரங்கள் நடப்பட்டு, 1867ம் ஆண்டு பணிகள் நிறைவு பெற்றது. அவர் 08.06.1876 ம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய 150வது நினைவு நாளான இன்று மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பாக அனுசரிக்கப்பட்டது. மேலும், தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: இரண்டு நாட்களுக்கு முன்பாக தமிழ்நாடு மதலமைச்சர் காணொலி வாயிலாக தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்கள். நமது மாவட்டத்தில் உள்ள 6 வட்டங்களில் மழைக்காலங்களில் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய 156 பகுதிகளை கண்காணிக்க 29 மண்டல குழுக்கள் (ஸ்ரீஷீஸீணீறீ ஜிமீணீனீஷ) அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் 24 மணிநேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என எற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவசர காலங்களில் பாதிக்கப்படும் பொதுமக்களை தங்க வைக்க 456 பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ள வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்சாரத்துறை, பொதுப்பணித்துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரப்பணிகள் துறை மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் தயார் நிலையில் உள்ளனர். இது தவிர 20 ஆயிரம் மணல் மூட்டைகளும், 20 ஜெ.சி.பி. இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளது.மேலும், மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பாதிப்பு ஏற்படும் போது பொதுமக்கள் தகவல் தெரிவிக்க மாவட்ட அவசர கால கட்டுப்பாட்டு மையத்தில் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077 மற்றும் 04232450034, 2450035க்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறே வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கட்டுப்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகிறது. உதகை கோட்டத்திற்கு 04232445577, குன்னூர் கோட்டத்திற்கு 0423 2206002, கூடலூர் கோட்டத்திற்கு 0426261296, உதகை வட்டத்திற்கு 04232442433, குன்னூர் வட்டத்திற்கு 04232206102, கோத்தகிரி வட்டத்திற்கு 04266271718, குந்தா வட்டத்திற்கு 04232508123, கூடலூர் வட்டத்திற்கு 04262261252, பந்தலூர் வட்டத்திற்கு 04262220734 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டும் தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும். இக்கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரமும் செயல்படும். மாவட்ட நிர்வாகம் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னேற்பாடுகளுடன் தயார் நிலையில் உள்ளதால், பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடைய வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.இந்நிகழ்வில், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் நவநீதா, உதவி இயக்குநர் பெபிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேவாலா நகர சுகாதார நிலையத்தில் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் ஆல் தி சில்ரன் சார்பில் நிகழ்ச்சி






தேவாலா, ஜூன்.10-

நீலகிரி மாவட்டம் தேவாலா நகர சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் தலைமை தாங்கினார் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் பாண்டியன், பிரவீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வட்டார மருத்துவ அலுவலர் கதிரவன் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கி பேசும்போது தொற்றா நோய்கள் தான் அதிக உயிரிழப்பு ஏற்படுகின்றன. அதில் புற்றுநோயும் ஒன்று. உணவு பழக்கம் முதல் நம்மில் உள்ள புகையிலை உள்ளிட்ட போதை பயன்பாடு போன்றவையும் புற்றுநோய் ஏற்படுத்தும் எனவே இவற்றை தவிர்க்க வேண்டும். புற்றுநோய் குறித்து பரிசோதனை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாய்புற்று , பெண்களுக்கான புற்றுநோய் பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் ஆரம்பகட்டத்தில் கண்டறிந்தால் சிகிச்சைகள் மூலம் குணப்படுத்திகொள்ளலாம். புற்றுநோயாளிகள் ஊட்டசத்து உணவுகளை எடுத்துக்கொள்வது அவசியம் என்றார். முதற்கட்டமாக 25 பேருக்கான ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டது. தொடர்ந்து தேவாலா, நெல்லியாளம், அய்யங்கொல்லி, அம்பலமூலா, கப்பலா, கொளப்பள்ளி உள்ளிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை சேர்ந்த புற்றுநோய் பயனாளிகளுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பலியட்டிவ் பிரிவு செவிலியர் நிஷாந்தினி மற்றும் செவிலியர்கள், மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# நல்லூர் ஸ்ரீ தர்மராஜாசுவாமி சமேத திரௌபதி அம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், ஜூன்.10-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ தர்மராஜாசுவாமி சமேத திரௌபதி அம்மன் ஆலயத்தில் 70ம் ஆண்டு தீமிதி திருவிழா கிராமதலைவர் மகேந்திரன், செயலாளர் டில்லி, பொருலாளர் மகேந்திரன், துணைத்தலைவர் துரைவேல், துணை செயலாளர் தருமன், கணக்கு தணிக்கையாளர்கள் சீனிவாசன், மாரி, லோகநாதன், ராஜா உட்பட ஆலய பொறுப்பாளர்கள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கொடிஏற்றுதல், காப்புகட்டுதல், ஸ்ரீ தர்மராஜாதுவாஜா ரோகன உற்சவம், அரக்கு மாளிகை உற்சவம், பக்கா சூரசம்ஹாசம், ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கல்யாண வைபவம், கரகம் எடுத்தல், அர்ஜூனன்தபசு, ஸ்ரீ தர்மராஜா ரத உற்சவம், மாடுபிடிசன்டை, படுகள உற்சவம் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் காப்புகட்டிய சுமார் 300க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடானை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# புதிய விதைகள் இயக்கம் சார்பில் தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் பங்கு பெற்று வெற்றி பெற்று மாணவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது





குரோம்பேட்டை, ஜூன்.10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட குரோம்பேட்டை லட்சுமிபுரம் பகுதியில் புதிய விதைகள் இயக்கம் சார்பில் தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் பங்கு பெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா புதிய விதைகள் செயலாளர் பா.தமிழ் குடிமகன், பொருளாளர் எஸ்.கிருஷ்ணன், எஸ்.செந்தில்குமார், அன்சாரி, கார்த்திக் ஸ்டாலின், லலித் குமார், எம்.சந்திரன், ஆர்.டில்லி பாபு ஆகியோர் தலைமையில் ஈசாக் மாஸ்டர், சிலம்பு ராஜா மாஸ்டர், நிறுவனர் பி.எஸ்.கங்கா என்கின்ற கங்காதரன் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமார், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் ஜே.காமாட்சி ஆகியோர் கலந்து கொண்டு சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பை வழங்கி கௌரவித்தனர் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதி செயலாளர் தா.ஜெயக்குமார், சாரல் ஒருங்கிணைப்பாளர் உஷா சந்திரசேகர், மதிமுக மாவட்ட செயலாளர் பாவை மகேந்திரன், தாவெக மாவட்டச் செயலாளர் மின்னல் குமார், முன்னாள் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் விடுதலை செழியன், லக்ஷயா ஹாஸ்பிடல் சிஇஓ ஆனந்த்,

தொழிலதிபர் மனோஜ், தவெக ராகேஷ் சர்மா என்கின்ற அஜய், செங்கல்பட்டு மாவட்ட தலைவர் வி.செல்வம், மாநிலத் துணைத் தலைவர் ஏ.சந்திரகுமார், மாநில ஓட்டுனர் அணி தலைவர் எஸ்..மணிகண்டன், மாநில விளையாட்டு அணி செயலாளர் ஏ.கார்த்திக் மகளிர் அணி நிர்வாகிகள் ஜே.சினேகா லதா எல்.பிரீத்தா, கே.கீதா, கே.சசிகலா, ஏ.பார்த்திமா இளைஞர் அணி ஏ.சுபாஷ் மற்றும் சமூக ஆர்வலர்கள் புதிய விதைகள் இயக்கம் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





## வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் ஆய்வு

சிவகங்கை, ஜூன்.10-

சிவகங்கை மாவட்டத்திற்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் காலாண்டு ஆய்வு பணி நடைபெற்றது. சிவகங்கை, காரைக்குடி மற்றும் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிகளில் பயன்படுத்தப்பட்ட விவிபாட் (VVPAT) இயந்திரங்களில் இருந்த மீதமுள்ள வெப்பக் காகிதச் சுருள்கள் மற்றும் முகவரி சீட்டுகள் அகற்றப்பட்டன. காஞ்சிரங்கால் பகுதியில் உள்ள பாதுகாப்பு அறையில் நடைபெற்ற இப்பணிகளை மாவட்ட ஆட்சியர் பொற்கொடி ஆய்வு செய்தார். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஆய்வுமற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



## 2 ஆண்டுகளுக்குப் பிறகு சலுப்போனடை கிராமத்திற்கு மீண்டும் பேருந்து சேவை

சிவகங்கை, ஜூன்.10-

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி அருகே உள்ள சலுப்போனடை கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த பேருந்து சேவை, கடந்த 2 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஞி. இளங்கோவன் நடவடிக்கை மேற்கொண்டார். அவரது ஏற்பாட்டில், திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ப. திவாகர் தலைமையில் தவெக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் பேருந்து சேவை மீண்டும் தொடங்கப்பட்டது. இதனால் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் பேருந்தில் பயணம் செய்தனர். கிராம மக்கள் இதற்காக சட்டமன்ற உறுப்பினர் ஞி. இளங்கோவனுக்கு நன்றி தெரிவித்தனர்.

## மானாமதுரையில் நாளை மின் குறைதீர்க்கும் கூட்டம்

மானாமதுரை, ஜூன் .10-

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், சிவகங்கை மின் பகிர்மான வட்டம் மேற்பார்வை பொறியாளர் பொறிஞர். ஷிறி.கலாவதி.நி.ணி., தலைமையில் மின் பயனீட்டாளர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 11.06.2026 அன்று காலை



11.00 மணி முதல் 1.00 மணி வரை செயற்பொறியாளர் / பகிர்மானம் / மானாமதுரை கோட்டத்தில் நடைபெறுவதால் மானாமதுரை கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் மேற்படி கூட்டத்தில் மேற்பார்வை பொறியாளர் அவர்களை நேரில் சந்தித்து தங்களின் மின்வாரியம் சம்மந்தமான குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்துகொள்ளுமாறு கொள்ளப்படுகிறது.



■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் வஞ்சிநகரம் கிராமத்தில் சிப்காட் தொழில்பேட்டை அமையவுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், இ.ஆ.ப.,பார்வையிட்டு ஆய்வு செய்தார் உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா இ.ஆ.ப., உடன் உள்ளார்.

# ஐடிபிபி சிவகங்கை ஆர்டிசி சார்பில் உலக சைக்கிள் தின பேரணி: 200க்கும் மேற்பட்டோர் ஆர்வம்!

சிவகங்கை, ஜூன் .10-

உலக சைக்கிள் தினத்தையொட்டி, சிவகங்கை இந்தோ திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படை (ITBP) மண்டல பயிற்சி மையத்தின் (RTC) சார்பில் சிறப்பு சைக்கிள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஆர்டிசி சிவகங்கை டிஐஜி டி.ஜஸ்டின் ராபர்ட் தலைமை தாங்கி இப்பேரணியைத் தொடங்கி வைத்தார். கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்பு இந்த விழிப்புணர்வு பேரணியில் ஐடிபிபி பணியாளர்கள் மட்டுமின்றி, இலுப்பைகுடி, அரசனூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், பள்ளி






கல்லூரி மாணவர்கள் என சுமார் 200க்கும் மேற்பட்டோர் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பேரணியின் முக்கிய நோக்கங்கள் சமூகத்தில் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது இப்பேரணியில் பின்வரும் முக்கிய கருத்துகள் வலியுறுத்தப்பட்டன:

உடல் தகுதி மேம்பாடு: தினசரி வாழ்வில் சைக்கிள் ஓட்டுவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுதல். சுற்றுச்சூழல் பாதுகாப்பு: புகையில்லாப் போக்குவரத்தை ஊக்குவித்து, மாசற்ற சூழலை உருவாக்குதல். எரிபொருள் சிக்கனம்: பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து நாட்டின் பொருளாதாரத்திற்கும், இயற்கைக்கும் பங்களித்தல்."இந்த நிகழ்வு உடற்பயிற்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்துவதுடன், பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான சமூகப் பிணைப்பை வலுப்படுத்தும் ஒரு சிறந்த தளமாக அமைந்தது" என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அனைத்துத் தரப்பினரின் தீவிர கூட்டு முயற்சியால், இந்த உலக சைக்கிள் தின பேரணி சிவகங்கையில் மிகச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்து முடிந்தது.

## மதுரையிலிருந்து செல்லும் அரசு பேருந்துகள் மானாமதுரையில் நின்று செல்ல வேண்டும்

### முதல்வர் மற்றும் எம்.எல்.ஏவிடம் ரயில்வே காலனி சேவை கரங்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை

மானாமதுரை, ஜூன் .10-

மதுரையிலிருந்து இராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் அனைத்து அரசு பேருந்துகளும் மானாமதுரை பேருந்து நிலையத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் ஆகியோரிடம் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.'இரயில்வே காலனி சேவைக் கரங்கள் - பிரண்ட்ஸ் கிளப்' அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து அனுப்பியுள்ள அந்த மனுவில், மானாமதுரையில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருவதாகவும், உயர் கல்வி மற்றும் மேம்பட்ட மருத்துவ வசதிகளுக்காக தினசரி மதுரைக்கு சென்று வர வேண்டிய நிலை இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும்



பெண்கள் அதிக அளவில் மதுரையை நம்பி யிருப்பதால், போக்குவரத்து வசதி மிக அவசியமானதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரையிலிருந்து இராமேஸ்வரம், இராமநாதபுரம், ஏர்வாடி, முதுகுளத்தூர், பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்லும் பல அரசு பேருந்துகள் மானாமதுரை பேருந்து நிலையத்திற்குள் வராமல் புறவழிச்சாலை வழியாகச் செல்வதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும், மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் இருந்து மானாமதுரை செல்லும் பயணிகளை சில நடத்துனர்கள் பேருந்துகளில் ஏற்ற மறுப்பதாகவும், மீறி ஏறினாலும் வழியிலேயே இறக்கிவிடப்படுவதாகவும் மனுவில் வேதனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் பெண்கள், மாணவிகள் மற்றும் முதியவர்கள் கடுமையான சிரமத்திற்கும் பாதுகாப்பு அச்சத்திற்கும் உள்ளாகி வருவதாகவும், மானாமதுரை நான்குவழிச்சாலை பேருந்து நிலையம் அருகே இருந்தும் பேருந்துகள் நிற்காமல் செல்வது பொதுமக்களை அவதிக்குள்ளாக்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அரசு போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு உரிய உத்தரவு வழங்கி, மதுரையிலிருந்து செல்லும் அனைத்து அரசு பேருந்துகளும் மானாமதுரை பேருந்து நிலையத்திற்குள் வந்து பயணிகளை ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## திருப்பூர்மாவட்டத்தில் கால்நடைகள் மற்றும் கால்நடை உரிமையாளர்கள் விவரம் பதிவேற்றம்

திருப்பூர், ஜூன்.10-

திருப்பூர் மாவட்டத்தில் வளர்க்கப்பட்டு வரும் கால்நடைகளுக்கு 12 இலக்கு அடையாள வில்லை எண் பதிவு செய்து, அதன் முழுவிவரம் மற்றும் உரிமையாளர் விவரம் மின்னணு தகவல் மூலம் பதிவேற்றம் செய்திட தேசிய மின்னணு கால்நடை இயக்கம் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கால்நடைகளுக்கான செயற்கை முறை கருவூட்டல், கால்நடை காப்பீடு விவரம், கன்று பிறப்பு விவரம், தடுப்பூசிகளான கோமாரிநோய், அடைப்பான் நோய், கன்று வீச்சு நோய் ஆகியவற்றுக்கான பதிவுகள் அடங்கிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு கால்நடை பராமரிப்புத்துறை மூலம் பதிவேற்றம் செய்யப்படுகிறது, இத்தகைய தரவுகள் கால்நடைகள் கொள்முதல், விற்பனை மேற்கொள்ளும்போது கால்நடைகள் பற்றிய முழுவிவரம் கால்நடை வளர்ப்போர் தெரிந்துகொள்ள பயனுடையதாக உள்ளது. தரவுகளை பதிவேற்றம் செய்யும்போது உரிமையாளரின் கைபேசி எண், ஆதார் எண் ஆகியவற்றை ஒருங்கிணைத்து விவசாயிகளின் கைபேசிக்கு வருகின்ற கடவுச்சொல் மூலம் கால்நடைகளின் முழுவிவரம் பதிவேற்றம் செய்யப்படுகிறது. அனைத்து கால்நடைகளுக்கும் தனித்துவ 12 இலக்கு எண் கொண்ட காதுவில்லை அணிவித்து, கால்நடை தொடர்பான விவரங்கள் மற்றும் கால்நடை உரிமையாளர்களின் விவரங்களை பாரத் பசுதன் தளத்தில் (Bharat Pashudhan Portal) பதிவேற்றுவது ஒன்றிய அரசாங்கத்தால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதால், பணி தொடர்பாக கிராமங்களுக்கு கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகை புரியும் போது அல்லது கால்நடை நிலையங்களுக்கு விவசாயிகள் செல்கையில் கால்நடை பராமரிப்புத்துறையினர் கோரும்போது, கால்நடை வளர்ப்போர் தங்களுக்கு வரும் கடவுச்சொல்லை தெரிவித்து, கோரும் விவரங்களை அளிக்க வேண்டுமாறு திருப்பூர் மாவட்ட அனைத்து கால்நடை வளர்ப்பு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்கள்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றம் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் "நிமிர்ந்து நில்" உயர்மட்ட நிர்வாகக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. துணை ஆட்சியர்(பயிற்சி) சித்தார்த் போகர்னா இ.ஆ.ப., உடன் உள்ளார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், முதல் தளத்தில், பொதுத் தேர்வு எழுதிய பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்வி சேர்க்கைக்கு வழிகாட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் துவக்கி வைத்து, உயர்கல்வி சேர்க்கை குறித்து குழு உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், மாவட்ட திறன் பயிற்சி அலுவலர் பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கல்வி) சர்தார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161